THE HINDU (TAMIL)
16 JULY 2021
PAGE 3

# காரைக்காலில் புதிய எம்பிஏ படிப்புகள்

புதுச்சேரி

புதுவை பல்கலைக்கழக ஆளுகைக்குக் கீழ் வரும் அந்தமான் நிகோபார் மற்றும் காரைக்கால் பகுதிகளில் இயங்கிவரும் பல்கலைக்கழக மையங்கள் சார்பாக நடப்பு கல்வியாண்டு முதல் எம்பிஏ படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளதாக துணைவேந்தர் குர்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுவைப் பல்கலைக்கழகத்தின் 2021-22 கல்வி ஆண்டிற்கான முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த மாணவர்களுக்கான விவரக் குறிப்பேடு அறிமுக விழா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக துணை வேந்தர் பேராசிரியர் குர்மீத்சிங் கலந்து கொண்டு குறிப்பேடை வெளியிட்டார். முதல் பிரதியை அந்தமான் நிகோபார் பல்கலைக்கழக மைய பொறுப்பு அதிகாரி ராஜ்குமார் பெற்றுக் கொண்டார். அப்போது துணைவேந்தர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.